12.10.2017

தினமலர்

# ஆந்திரா கனமழை : வேகமாக நிரம்பும் சென்னை ஏரிகள்



சென்னை  ஆந்திராவில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து கனமழை பெய்து : இதனால் ஆந்திர மாநிலம் அம்மாபள்ளி அணையில் இருந்து திறக்கப்படும் .வருகிறது இதன் காரணமாக .நீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளதுசென்னைக்கு வரும் நீரின் அளவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

சென்னையின் முக்கிய நீர் ஆதாரமாக கருதப்படும் பூண்டி நீர்தேக்கத்தின் நீர்மட்டம் 10 மில்லியன் கனஅடி அதிகரித்து 150 மில்லியன் கனஅடியாக உள்ளது பூண்டி . ஏரிக்கு தற்போது121 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறதுஇதே போன்று புழல் ., செம்பரம்பாக்கம், சோழவரம் உள்ளிட்ட ஏரிகளுக்கு வரும் நீரின் அளவும் அதிகரித்துள்ளது இதனால் இவற்றின் நீர்மட்டம் .903 மில்லியன் கனஅடியை தற்போது எட்டி உள்ளது.

செம்பரம்பாக்கம் ஏரியில் தற்போது நீர்மட்டம் 318 மில்லியன் கனஅடியாகவும், புழல் ஏரியில் 354 மில்லியன் கனஅடியாகவும், சோழவரம் ஏரியில் 81 மில்லியன் கனஅடியாகவும் உள்ளது கடந்த சில மாதங்களாக குடிநீருக்காக பெரும் அவதிப்பட்டு . வந்த சென்னை மக்களுக்கு, இது மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தினமணி

## தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு

அரபிக்கடலில் உருவாகியுள்ள மேலடுக்குச் சுழற்சியின் காரணமாக தமிழகத்தில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.
தென்மேற்குப் பருவமழை காரணமாக உருவாகும் மேலடுக்குச் சுழற்சி காரணமாக தமிழகத்தில் பல்வேறு இடங்களில் மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக ஒகேனக்கல்லில் 170 மி.மீ. மழை பெய்துள்ளது. இந்நிலையில் மழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக அதிகாரிகள் கூறியது: கேரளம் மற்றும் கிழக்கு மத்திய அரபிக்கடலில் உருவாகியுள்ள வளிமண்டல மேலடுக்குச் சுழற்சியின் காரணமாக தமிழகம் , புதுச்சேரியில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும். ஓரிரு இடங்களில் கனமழைக்கும் வாய்ப்புள்ளது.

சென்னையைப் பொருத்தவரை நகரின் சில பகுதிகளில் மாலை அல்லது இரவு நேரங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என்று தெரிவித்தனர்.

**புதன்கிழமை பதிவான மழை நிலவரம் (மி.மீட்டரில்):**

ஒகேனக்கல் - 170, கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை , பெரம்பலூர் மாவட்டம் செட்டிக்குளம் - 100, கிருஷ்ணகிரி மாவட்டம் சூலகிரி , வேலூர் மாவட்டம் மேலாத்தூர், குடியாத்தம் - 90, பென்னாகரம் -80, தருமபுரி மாவட்டம் மாரண்டஹள்ளி, மதுரை மாவட்டம் வாடிப்பட்டி , உளுந்தூர்பேட்டை, ராசிபுரம், ஏற்காடு, அரியலூர், கிருஷ்ணகிரி மாவட்டம் ராயகோட்டா , பரமத்திவேலூர், சேலம் - 70, அரக்கோணம், கள்ளக்குறிச்சி, தஞ்சாவூர், நாமக்கல் - 60.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

சேலம் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையால் மேட்டூர் அணைக்கு : நீர்வரத்து19,225 கன அடியில் இருந்து 31,236 கன அடியாக அதிகரித்துள்ளது . அணையின் நீர்மட்டம்97.30 அடியாகவும், நீர் இருப்பு 61.39 டி .சியாவும் உள்ளது.எம். சம்பா சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து விநாடிக்கு18,000 கனஅடி நீர் திறக்கப்படுகிறது.

## கே.ஆர்.பி அணையிலிருந்து வினாடிக்கு4,644 கன அடி நீர் திறப்பு

கிருஷ்ணகிரி பி அணையிலிருந்து வினாடிக்கு.ஆர்.கே :4,644 கன அடி நீர் திறக்கப்பட்டது பி அணையிலிருந்து நீர் திறக்கப்பட்டதால்.ஆர்.கே . தென்பெண்ணையாற்றின் கரையோரம் வசிக்கும்5 மாவட்ட மக்களுக்கு தொடர்ந்து வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது பி.ஆர்.கே .அணையிலிருந்து நீர் திறக்கப்பட்டதால் ஆற்றில் குளிக்கவோ, கடக்கவோ கூடாது என மாவட்ட நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## மேட்டூர் அணை நீர்மட்டம் உயர்வு




மேட்டூர் காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த :3 மாதங்களாக பெய்த மழையால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்தது தற்போது மழையின் தாக்கம் .

குறைந்து விட்டதால் நேற்று முன்தினம் விநாடிக்கு19,317 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று 19,225 கனஅடியாக சரிந்தது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக விநாடிக்கு 15 ஆயிரம் கனஅடி நீர் திறந்து விடப்படுகிறது நேற்று . முன்தினம்96.09 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், நேற்று காலை 96.37 அடியாக உயர்ந்ததுஇந்நிலையில் ., ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து நேற்று விநாடிக்கு 32,000 கன அடியாக அதிகரித்தது.